பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 02 வெள்ளிக்கிழமை 15.05.2020 கதிர் 191

## 5 இலங்கையருக்கு மாலைதீவில் தொற்று

மாலே, மே 15
சுமார் 5லட்சம் மக்கள் தொகை கொண்ட மாலைதீவில், 955 பேர் ஏற்கனவே கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து இலங்கையர்கள் தற்போது மாலைதீவில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## 498 கடற்படையினருக்கு இதுவரை கொரோனா!

கொழும்பு, மே 15
இலங்கையில் நேற்றுக் காலை வரை இனங்காணப்பட்ட 925 கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 498 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்று இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 26 பேர் நேற்று முன் தினம் இரவு வரை இனங்காணப்பட்டனர் என்று நேற்றுக் காலை

பக்கம் 04

## கொரோனாவைக் காணம் காட்டி தொழில்களைப் பறிக்கமுடியாது

### சொல்கிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, மே 15
கொரோனாவை காரணம் காட்டி தனியார் துறை ஊழியர்களின் தொழிலைப் பறிக்க முடியாது என அரசு தெரிவித்துள்ளது.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அமைச்சர்

பக்கம் 02

## இது ரகசியம் அல்ல!

சுமந்திரனின் பேட்டி விடயம் இத்தோடு அடங்கிவிடும் என்பது போலத்தான் தோற்றுகின்றது.
சில ஊடகங்களுக்கு அந்த ஊடகங்களின் முதல்வர்கள் அரசியல் செய்வதற்கு இந்தப் பேட்டி தொடர்ந்து உதவக்கூடும்.
– 'குரங்கின்

பக்கம் 02

# தமிழ்க் கூட்டமைப்பினருடன் இணைந்து பயணிக்கத் தயார்

## சம்பந்தனிடம் புதிய இந்தியத் தூதுவர் கோபால் உறுதி



கொழும்பு, மே 15
தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவதற்குத் தான் தயாராக உள்ளார் என இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரி வித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 02



## மாலைதீவில் சிக்கியிருந்த 288 பேர் கொழும்புக்கு

கொழும்பு, மே 15
கொரோனா வைரஸ் தொற்றினால் இலங்கைக்குத் திரும்ப முடியாமல், மாலைதீவில் சிக்கியிருந்த 288 இலங்கையர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
மலே விமான நிலையத்திலிருந்து, சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின்,

பக்கம் 04

## அரசை வீழ்த்துவோம்!

### சூளுரைக்கிறார் ராஜிதவின் மகன்

கொழும்பு, மே 15
2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மஹிந்த அரசை தோற்கடித்தது போல அடுத்த சில மாதங்களில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசையும் வீழ்த்துவோம். அதற்கான நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது.
– இவ்வாறு ராஜித சேனாரத்னவின் மகனான முன்னாள் நாடாளுமன்ற

பக்கம் 04

## யாழ்.பல்கலைக்கழக வாசலில் நேற்று தீபம் ஏற்றி நினைவேந்தல்



யாழ்ப்பாணம், மே 15
யாழ்.பல்கலைக்கழகப் பண்பாட்டு நுழைவாயிலில் நினைவேந்தல் தீபங்கள் ஏற்றப்பட்டன.
இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று

பக்கம் 04

## தேர்தலுக்கு எதிரான மனுக்களை விசாரிக்க ஐந்து நீதியரசர்கள் குழு

கொழும்பு, மே 15
ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை ஆராய்வதற்காக ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழு ஒன்றை உயர்நீதிமன்றம் நியமித்துள்ளது.
பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய இந்தக் குழுவின் தலைவராகச் செயற்படவுள்ளார். நீதியரசர்கள் குழுவில் புவனெக அலுவிஹார,

பக்கம் 04

## சிறிதரனிடம் இன்று விசாரணை

கிளிநொச்சி, மே 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் ஆகிய இருவரையும் இன்று விசாரணைக்கு முன்னிலையாகுமாறு கிளிநொச்சிப் பொலிஸார்

பக்கம் 02

## மங்கள சமரவீரவிடம் சி.ஐ.டி. 5 மணி நேரமாக விசாரணை!



கொழும்பு, மே 15
முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் இன்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
குற்ற

பக்கம் 04

## சிகிச்சை பெற்று யாழ்.திரும்பிய ஐவருக்கு மீண்டும் கொரோனா

யாழ்ப்பாணம், மே 15
கடந்தமாதம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியிருந்த அரியாலையைச் சேர்ந்த ஐவருக்கு இன்னமும் கொரோனா தொற்று அறிகுறிகள் சிறிதளவு காணப்படுவதாக பரிசோதனை முடிவுகள் தெரிவிப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
இவர்கள் ஐவரும் தொடர்ந்தும் இரண்டு கிழமை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தலில்

பக்கம் 04

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப் புண்' என்பார்கள். அதுபோல.

குரங்கு தன் கையில் புண் வந்தால் அது ஆறுவதற்கு விடாது. தன் குரங்குப் புத்தியைக் காட்டிக் கொண்டிருக்கும். அதைச் சொறிந்து, சொறிந்து பெரிய புண்ணாக்கி விடும் என்பார்கள்.

அது போல சில ஊடகங்களுக்கு அவர்களின் முதல்வர்கள் அரசியல் செய்வதற்கு இந்தப் பேட்டிதான் ஒரே புகலிடமாக இருக்கும். அதனால் அதைப்போட்டு நோண்டிக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால் விடயம் அடங்கிப் போய் விடும் என்று நான் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு.

கூட்டமைப்புக்குள் பெரும் களேபரம் வெடிக்கும் போல பல அதிர்வுகளை ஏற்படுத்திய இந்த விடயம் குறித்து நேற்றுப் பிற்பகல் வரை சுமந்திரனுடன் ஒரு சொல் கூட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பேசவில்லை. தமக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு, தேர்தல் ஆணையத்தில் நடைபெற்ற கூட்டத்தின் விவரங்கள் உட்பட பல விடயங்களை கொழும்பில் இருக்கும் சம்பந்தன் ஐயாவுக்கு கொழும்பில் இருக்கும் சுமந்திரன் தொலைபேசி வாயிலாக விளக்கியிருக்கின்றார். சம்பந்தன் எல்லா விடயங்களையும் கேட்டறிந்திருக்கின்றார்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும், சுமந்திரனின் சிங்களப் பேட்டி குறித்தோ, அதை ஒட்டி தமிழ்த் கூட்டமைப்பு முன்னாள் எம்.பிகள் குழாம் ஒன்று நடத்தும் 'திருக்கூத்து' குறித்தோ இதுவரை சுமந்திரனிடம் சம்பந்தன் ஒரு சொல் கேட்டதும் இல்லை. சுமந்திரன் தானாகத் தன்னும் ஒரு சொல் சொன்னதும் இல்லை என்பதை நூறு வீதம் என்னால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

சுமந்திரனின் செவ்வி தொடர்பில் மாவைவீட்டிலிருந்து வந்த அழைப்புகளை சம்பந்தன் செவிமடுத்திருக்கக் கூடும்.

*"அப்படியா?", "அவசரப்பட வேண்டாம்", "பார்ப்போம்!"* – என்ற பாணியில் சம்பந்தன் பதிலளித்தார் எனக் கூறப்படுகின்றது. எனினும் இந்த உரையாடல்கள் குறித்து உறுதியான தகவல்களைப் பெறுவதோ உறுதிப்படுத்துவதோ எனக்கு இயலவில்லை.

இதற்கிடையில் மேற்படி சுமந்திரனின் செவ்வி தொடர்பில் 'காலைக்கதிர்' நாளிதழில் வந்த விவரங்களை சம்பந்தன் தமது உதவியாளர் மூலம் 'பிரிண்ட்' எடுத்து வாசித்தார் என்று குறிப்பிட்டேன் அல்லவா?

அதைத் தொடர்ந்து மேற்படி சுமந்திரனின் சிங்கள செவ்வியின் காணொலியைச் சம்பந்தன் ஐயா அகலத்திரையில் விரிவாகப் போட்டுப் பார்த்தார் என்று கூறப்படுகின்றது. தனது பேட்டிக்குக் காரணங்கள், விளக்கங்கள் கூறி சுமந்திரன் பக்கத்தில் வெளியான அடுத்த காணொலியையும் கூட மிக உன்னிப்பாக அவதானித்தார் சம்பந்தன்.

சிங்கள உரையாடல்கள் சம்பந்தனுக்கு நன்கு விளங்கும். சாட்சிகளை சிங்களத்தில் குறுக்கு விசாரணை செய்யக் கூடிய ஒரு சட்டத்தரணி அவர்.

சுமந்திரன் அந்தச் சிங்களச் செவ்வியில் வெளிப்படுத்தி நின்ற நிலைப்பாடு, தமிழர் சார்பில் தீர்வு முயற்சியைக் கொண்டு செல்வதற்கு எவ்வளவு முக்கியமானது என்பது சம்பந்தனுக்குத் தெரியும், புரியும்.

இவற்றை எல்லாம் பார்த்த பின்னர், சுமந்திரனுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டு ஆரவாரம் பண்ணிய தமிழரசுக் கட்சி முன்னாள் எம்.பி ஒருவரைத் தொலைபேசியில் ஒரு பிடிபிடித்தார் சம்பந்தன் என்று தகவல். முழு விவரமும் அறியமுடியவில்லை.

ஆனால், ஆரம்பத்தில் சுமந்திரனுக்கு எதிராகக் குதித்து முறிந்த அந்தப் பிரமுகர் இப்போது 'காஸ் இறங்கிய சோடாப் புட்டி' போல அடங்கி, இந்த விடயத்தை அமுக்கி வாசிக்கின்றார் என்று தகவல்.

இந்த விடயத்தை ஒட்டி சுமந்திரனை ஒரு கை பார்க்கிறேன் என்று களத்தில் முஷ்டியை மடக்கிக் கொண்டு இறங்கிய மாவை தரப்பின் நிலைமையும் கூட அதுதானாம்.

வன்னி முன்னாள் எம்.பிக்கள், புளொட், ரெலோ தலைவர்கள் எல்லோரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத் திற்குப் படை எடுத்திருந்தனர். நேற்று இப்பத்தியில் நான் குறிப்பிட்டபடி மாறி, மாறி ஓடி ஓடிச் சந்திப்புகள்.

ஒரு முன்னாள் எம்.பி., யாழ்ப்பாணத்தில் இன்னொரு நெருக்கமான பிரமுகரைச் சந்தித்தார். *"மாவை அண்ணை விழுந்தழுந்து வா, வா எண்டு வற்புறுத்தியதாலை வரவேண்டியாகிவிட்டது. எப்படியும் சுமந்திரனை இந்த விடயத்தை வைச்சு அடக்கிப் போட வேணும் எண்டு மாவையும், மாவையைச் சூழ ஒரு அணியும் படு உஷாரா நிக்குது... ஆனால் விடயம் சரி வரும் எண்டு நான் நினைக்கெல்ல..."* என்று அவரிடம் கூறினாராம்.

*"பங்காளிக் கட்சிகள் படுசூடா நிக்குதுகள், எப்படியும் சுமந்திரனை குறைந்த பட்சம் கூட்டமைப்புப் பேச்சாளர் பதவியிலை இருந்தாவது இறக்க வேணும்... இல்லாட்டி வாக்காளர்கள் கூட்டமைப்புக்கு எதிராகத் திரும்பி விடுவினம்...!"* – எண்ட மாதிரி கதை பரப்பி விடயத்தை முடிப்பது தான் மாவை தரப்பின் திட்டம்.

ஆனால், புளொட் சித்தார்த்தன், அந்தத் திட்டத்துக்கு – மாவை தரப்பின் சதி வலைக்கு – உடன்பட அடியோடு மறுத்து விட்டார் என்று தெரிகின்றது.

'ஆயுதப் போராட்டத்தை நான் ஏற்கவில்லை' என்று சுமந்திரன் சொன்னது தான் சித்தார்த்தன் தரப்புக்குச் சீற்றம். அதில் நியாயமும் உண்டு. ஏனென்றால் புளொட்டும் தமிழர் உரிமைகளுக்காக ஆயுதத்திலை நம்பிக்கை வைத்துப் போராடிய இயக்கம்தான். இப்போது அதை விட்டு அரசியல் இயக்கமாக மாறி விட்டது என்பதற்காக முன்னைய ஆயுதப் போராட்டத்தை ஏற்கமாட்டேன் என்று சொல்வதை அக்கட்சி அங்கீகரிக்க முடியாதுதானே. எனவே தன் பங்குக்கு அதை விளக்கி அறிக்கை விட்டமையுடன் இந்தப் பிரச்சினையில் இருந்து ஒதுங்கிக் கொள்ளவே அக்கட்சி விரும்புகின்றது.

ஆனால் மாவையின் நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. தன் பங்குக்கு ரெலோ தலைவர் செல்வத்தையும் சேர்த்துக் கொண்டு சித்தரை இரண்டு தடவைகளுக்கு மேல் அலுப்புக் கொடுத்திருப்பார் போலும்.

*"அண்ணை இது முதலிலை உங்கடை தமிழரசுக் கட்சிப் பிரச்சினை. முதலில சம்பந்தர் ஐயாவோடை கதைச்சு உங்கடை கட்சிக்குள்ளை ஒரு முடிவை எடுங்கள். அதுக்குப் பிறகு பார்க்கலாம்."* – என்று கையை விரித்து விட்டார் சித்தர்.

ரெலோ செல்வத்தின் ஆதரவு கிட்டியும் அதற்கு மேல் விடயத்தை நகர்த்த முடியாத சிக்கல் மாவையருக்கு.

செல்வத்தையும் யாழ்ப்பாணத்தில் கட்சி ஆதரவாளர் ஒருவர் மறித்திருக்கின்றார். சுமந்திரன் தரப்புச் செய்திகள் காலைக்கதிரில் வருகின்றன. அவற்றில் ஏதோ நியாயம் இருப்பது மாதிரி தெரிகின்றதே என்று அந்த ஆதரவாளர் வற்புறுத்திக் கூறவும் 'காலைக்கதிரா! அது சுமந்திரனின் ஊது குழல்!' – என்று சூடாகப் பதிலளித்தாராம் செல்வம்.

நல்லது. நல்ல பட்டம் – நம் பத்திரிகைக்கு. ஆனாலும் நாம் யார் ஊது குழல் அல்லர் அதை செல்வத்துக்கு விளக்குவது நல்லது.

நான் ஒரு நீண்ட கால நீதிமன்றச் செய்தியாளன். பல தடவைகள் இப்பத்தியிலேயே அது குறித்து குறிப்பிட்டிருக்கிறேன்.

செல்வம் எங்கள் பத்திரிகையை 'ஊது குழல்' என்றதும் எனக்கு செல்வத்துடன் தொடர்புடைய குழல் பொருத்திய ஒரு கருவி பற்றிய விடயம் நினைவுக்கு வந்தது. அந்தக் கருவி பற்றிய வழக்கு – என் நினைவு சரியாக இருக்குமானால் 2010இல் சுமந்திரன் எம்.பியாக வருவதற்கு முன்னர் – ஆரம்பமானது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழானது. அந்தச் சட்டத்தின் கீழான வழக்குகளில் பிணை கிடையாது. ஆனால் செல்வம் வெளியில் இருந்தார். அப்போது எம்.பியாக இருந்த செல்வத்துக்கு விசாரணை அறைக்குள் ஏற்பட்ட கசகசப்பான – கீழ்தரமான – அனுபவம் பற்றிய நான் மிக விவரமாக அறிந்திருந்தேன். அது குறித்து அரசுத் தரப்பைக் கடுமையாகச் சாடி அப்போது நான் இருந்த பத்திரிகையில் விலாவாரியாக எழுதிய நினைவு எனக்கு இருந்தது. அந்தச் சமயத்தில் செல்வத்தை வெளியில் – பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் விதிவிலக்காகப் பிணையில் வெளியே – வைத்திருப்பதில் சுமந்திரனின் பங்களிப்புக் குறித்து சட்ட மா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் மூலம் நான் சில விடயங்களை அறிந்திருந்தேன்.

ஆனாலும் நீண்ட காலம். பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. பல விடயங்கள், விவரங்கள் மறந்து விட்டன். அவை பற்றித் துருவலாம் என்று நினைத்துக் கொண்டு சுமந்திரனுடன் தொடர்பை ஏற்படுத்தித் தூண்டிலைப் போட்டேன்.

இப்போது திடீரென ஏன் அந்த வழக்குத் தகவல்கள் என்று வழமையான தனது சட்டத்தரணிப் பண்பியல்புடன் பதில் கேள்விக் கணை தொடுத்தார் சுமந்திரன்.

*"இல்லை அரசியல் வேறு, சட்டத்தரணி பணி வேறு. அது குறித்து – எனது கட்சிக்காரர் செல்வம் குறித்து – உங்களிடம் தகவல் பரிமாறுவதோ, விடயங்கள் சரி, பிழை கூறுவதோ என் தொழிலுக்குப் பொருத்தமற்றது. இப்போது செய்திக்குரிய வழக்கு அல்லாது வேறு வழக்கு விடயங்கள் குறித்து பேசாதீர்!"* – என்று ஒரே வெட்டாக வெட்டினார் சுமந்திரன்.

இதில் இரண்டு விடயங்கள்.

ஒன்று – அரசியலில் ஒரே கட்சிக்காரராக (கூட்டமைப்பு கட்சிக்காரராக) சுமந்திரனுடன் செல்வமும் இருக்கின்றார். ஆனால் சுமந்திரனை தனது சக கட்சிக்காரர் என்ற பொறுப்புடன் செல்வம் செயற்பட்டாரோ இல்லையோ, சட்டத்துறையில் தமது கட்சிக்காரரான செல்வத்தை விட்டுக் கொடுக்காமல் பொறுப்புடன் பேசி இவ்விடயத்தில் எம்மை வெட்டி ஒதுக்கினார் சுமந்திரன். அதுவும் செல்வத்தினால் அவரின் 'ஊது குழல்' என்று விமர்சிக்கப்பட்ட எம் பத்திரிகைக்குத் தகவல் தர மறுத்து விலத்தினார் சுமந்திரன்.

அவர் என் நினைவில் நிழலாடிய அந்தப் பழைய வழக்கு விவகாரத்தின் விளக்கத்தைக் கூற மறுத்தாலும், நான் நீதிமன்றச் செய்தியாளன். பழைய பத்திரிகைகளைத் தேடிப் பிடித்து, நீதிமன்றப் பதிவுகளை கண்டறிந்து விடயத்தை மீண்டும் கவனிப்புக்குக் கொண்டு வருவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. என் நினைவு சரி என்றால் வவுனியா நீதிமன்றக் கோவைகளை தூசு தட்டிப் புரட்டிப் பார்க்க – நோட்டமிட – எனக்கும் கொஞ்சம் காலம் பிடிக்கும். அவ்வளவுதான்.

தேடிப் பிடித்து எடுத்தால் சுமந்திரன் எதிர்ப்பு அணியில் செல்வத்தின் 'சிறப்பை' வெளிப்படுத்த முடியும் என நம்புகிறேன். ஒரு தடவை முயன்று பார்ப்போம். நீதிமன்றத் தொடர்புகளை இழந்து நீண்ட காலம் என்பதால் சற்றுக் கஷ்டமாக இருக்கக் கூடும்.

இரண்டு – சுமந்திரனின் சட்டத்தரணிப் பணியை வசமாக அனுபவிக்கும் இன்னொரு தரப்பும் யாழ்ப்பாணத்தில் உண்டு. 'ஓஸி'யில் சுமந்திரனின் சேவையைத் தாராளமாகப் பெற்றுக் கொண்டு அவரை வறுத்தெடுப்பதுதான் அத்தரப்பின் நிரந்தரப் பணி.

சுமந்திரனின் ஜூனியர் சட்டத்தரணி ஒருவர் அது குறித்தும், எதிர்கால நிலைமை – குறித்தும் கூறும் கருத்தை நாளை பார்ப்போமா?

–மின்னல் –

## சிறிதரனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் அனுப்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தினார்கள் என அவர்கள் மீது பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினமான 2020.03. 08 ஆம் திகதியன்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் பசுமைப்பூங்கா வளாகத்தில் நடத்தப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முதற்பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணியின் உருவப்படமும், விடுதலைப் புலிகளின் சீருடையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்ததாகக் கொக்காவில் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில், கடந்த மார்ச் 13 ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டு, வாக்கு மூலம் பெறப் பட்டிருந்தது.

இந்த விசாரணை நடைபெற்று இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அதே விடயம் தொடர்பிலான மேலதிக விசாரணைக்காக இன்று பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமறிக்கு மாறு இருவருக்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

## கொரோனாவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துல குணவர்த்தன இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் இப்போதுள்ள நிலையில் நாட்டுக்கான இறக்குமதியை குறைத்தாக வேண்டும். இது குறித்து ஆரம்பத்தில் அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துவ இறக்குமதிக்குத் தடைகள் இல்லை. அத்துடன் கட்டுமானப்பணிகளுக்கான பொருள்கள் உள்ளிட்ட சில பொருள்களுக்கு இறக்குமதி அனுமதி உள்ளது.

தேசிய இறக்குமதியாளர், தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு பிரச்சினைகள் இருப்பின் நிதி அமைச்சை தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடியும்.

இன்று தனியார் உள்ளிட்ட சகல துறையினரும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில் தனியார் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துவது எவ்வாறு என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலைமை மேற்கத்திய நாடுகளில் உருவானால் அவர்கள் உடனடியாக நிறுவனத்தை மூடிவிட்டு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்.

எனினும் இங்கு அவ்வாறு இடம்பெற முடியாது. மிக அதிகமான ஊழியர்கள் தனியார் துறையில் உள்ளனர். அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அதற்காகவே அரசு ஊரடங்கு காலத்திலும் படிப்படியாக நிறுவனங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கியுள்ளது.

ஒரு சில விடயங்களில் அவர்களுக்கான தற்காலிக நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கடன் செயற்பாடுகள் தற்காலிகமாக மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே இது குறித்து அமைச்சரவையில் அமைச்சர் தினேஷ் குணவர்தன உரிய காரணிகளைத் தெளிவுபடுத்தினார்.

கொவிட் –19 நோய் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்கள் எவரதும் வேலைகள் பறிக்கப்பட முடியாது. அது குறித்து தனியார் நிறுவனச் சங்கங்களுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். இதில் பிரதான இரண்டு காரணிகளாக நிறுவனங்கள் மீண்டும் தலைதூக்கும் வரை கொடுப்பனவில் 50 வீதத்தையேனும், குறைந்த பட்சம் 14ஆயிரத்து 500 ரூபாவுக்கு குறித்த தொகையை மாதாந்த கொடுப்பனவாக தனியார் துறையினருக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது– என்றார்.

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராகப் புதுடில்லியில் பதவியேற்ற பின்னர் இங்கு வந்த கோபால் பாக்லே தனது நற்சான்றுகளை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் காணொலி மூலம் கையளித்தார். அதன்பின்னர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட அவர், சமகால நிலைவரங்கள் தொடர்பில் பேசினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் சம்பந்தனிடம் அவர் கேட்டறிந்தார். இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டையும் சம்பந்தனிடம் அவர் கூறினார்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவதற்குத் தான் தயாராக உள்ளார் என்றும், விரைவில் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினரைச் சந்திக்க வுள்ளார் என்றும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இலங்கையும் இந்தியாவும் பலகாலங்களாக இணைந்து செயற்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்று இரா.சம்பந்தன், தூதுவருக்கு இதன் போது உறுதியளித்தார்.

# வங்கிக் கடன்களைச் செலுத்தாது தப்பியவர்கள் பணக்காரர்களே!

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

**கொழும்பு, மே. 15**

**நாட்டில் கடந்த காலங்களில் வங்கிகளில் இருந்து கடன்பெற்று அவற்றை திருப்பிச் செலுத்தாதவர்களில் அதிகமானவர்கள் ஏழைகளன்றி பணக்காரர்களேயாகும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வங்கிகளின் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளார்.**



கொரோனாவுக்கு பிந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு வங்கித் துறையை பங்குதாரராக்கிக் கொள்ளுதல் மற்றும் அதன்போது வங்கித் துறையில் உருவாகியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டீ. லக்ஷ்மன் உட்பட பிரதி ஆளுநர்கள், அரச மற்றும் தனியார் துறை வங்கித் தலைவர்கள் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொரோனா வைரஸை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க அரசுக்கு முடியுமாக இருந்தது. தற்போதுள்ள பெரும் சவால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகும். ஆடைக்கைத்தொழிலை வழமை நிலைக்கு கொண்டுவர நீண்ட காலம் செல்லும். சுற்றுலா துறையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இழந்த வருமானம் மற்றும் தொழில்கள் மிகவும் பெரியதாகும். பழைய இறக்குமதி முறைமையை தொடரந்தும் முன்னெடுக்க முடியாது. நாம் உற்பத்தி பொருளாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காகச் செயற்திறமாக பங்களிப்பதற்கு வங்கித் துறையினருக்கு முடியும்' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொரோனா பிரச்சினையை வெற்றிகொள்வதற்கு சுகாதாரத்துறை உள்பட அனைத்து தரப்பினரும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வங்கித் துறையிடமும் அத்தகைய பங்களிப்பை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

தற்போதுள்ள முக்கிய தேவை உற்பத்தி பொருளாதாரத்தை பலப்படுத்துவதாகும். இதற்காக முதலிடக்கூடிய பல துறைகள் உள்ளன. தேயிலை உள்பட பெருந்தோட்ட கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகள், வீடுகள் மற்றும் ஏனைய நிர்மாணத் துறை, விவசாயத்துடன் தொடர்புடைய உற்பத்திகள் பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா, மிளகு போன்ற பயிர்கள் அவற்றில் சிலவாகும்.

இத்துறைகளில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக இலகுவான நிபந்தனைகளின் கீழ் கடன் வழங்குமாறு ஜனாதிபதி வங்கிச் சமூகத்திடம் கேட்டுக்கொண்டார்.

'வாகனங்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் போன்ற இறக்குமதிக்காக கடன் வழங்கி இலகுவாக இலாபமீட்டும் முறைமையை தொடர்ந்தும் பேண முடியாது. புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னுரிமைகளுக்கே அதிகம் கடன் வழங்கப்பட வேண்டும். விவசாயிகள் அதிக வட்டிக்கு வியாபாரிகளிடம் கடன் பெறுகின்ற போது அவர்கள் வியாபாரிகளினால் சுரண்டப்படும் நிலைக்கு ஆளாகின்றனர். அது எல்லா வகையிலும் பாதிப்பானதாகும்.

பெரிய வியாபாரிகளுக்கு போன்றே சிறிய வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் வங்கிகள் உதவ வேண்டும்.' என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, கடன் வழங்கியதன் பின்னர் அதன் மூலம் பயன்பெறும் விதம் குறித்து தொடர்ந்தும் தேடிப்பார்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வங்கிகளில் இருந்து கடன் பெற்று அவற்றை திருப்பிச் செலுத்தாதவர்களில் அதிகமானவர்கள் ஏழைகளன்றி பணக்காரர்களேயாகும் என்று குறிப்பிட்டார். மத்தியதர வர்க்கத்தினருக்காக வீடுகளை நிர்மாணித்து சலுகை விலையில் அவற்றை வழங்குவதற்கு தனது கொள்கை பிரகடனத்தில் உறுதியளித்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அத்தகைய சந்தர்ப்பங்களில் மத்தியதர வர்க்கத்தினருக்கு குறைந்த வட்டிக்கு கடன் வழங்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

கலந்துரையாடலில் பங்குபற்றிய வங்கிப் பிரதிநிதிகள் பொருளாதார புத்தெழுச்சிக்காக அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டனர். அவர்கள் வங்கித் துறை முகம்கொடுத்துள்ள சில பிரச்சினைகளையும் முன்வைத்ததுடன், மத்திய வங்கியுடன் கலந்துரையாடி அவற்றை தீர்த்துக்கொள்ளவும் இணக்கம் தெரிவித்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# ரயில் மற்றும் பஸ் பயணிகள் சேவையில் மேலும் வசதிகள்

கொழும்பு, மே. 15

ரயில் மற்றும் பஸ் பயணிகள் சேவையில் நேற்று வியாழக்கிழமை முதல் மேலும் சில வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கிணங்க ரயில் பயணிகளுக்கு நேற்று முதல் பருவச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இந் நிலையில், பயணிகள் தமது நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையைச் சமர்ப்பித்து பருவச்சீட்டுக்களைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஊரடங்கு நடைமுறையில் உள்ள கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 23 மாவட்டங்களிலும் அரச, தனியார் பஸ்கள் மற்றும் ரயில்களிலும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அத்தியாவசிய தேவைகளுக்கு செல்வோருக்கு மாத்திரம் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரச தனியார் நிறுவனங்களின் பணிகளை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் வகையிலும் அத்தியாவசிய சேவைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற் காக போக்குவரத்து வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# மகாவலி கங்கையில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, மே. 15

மகாவலி கங்கையிலிருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி மாகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 88 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாயான கே.வெள்ளையம்மா என்பவரே இவ்வாறு நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்

சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண் ,வெற்றிலை வாங்கி வருவதாகக் கூறி வீட்டிலிருந்து வந்தவரென்றும் மகாவலி ஆற்றை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாலத்தில் நடந்து செல்கையிலே தவறி ஆற்றில் வீழ்ந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

பொலிஸாரும் பொதுமக்களும் நேற்று மாலையிலிருந்து இந்த வயோதிப் பெண்ணைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே ரயில் பாலத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் மகாவலி கங்கையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணை தொடர்வதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆடம்பரப் பொருள்கள், கார்களின் இறக்குமதிக்கு இடைக்கால தடை

கொழும்பு, மே. 15

இலங்கைக்கு ஆடம்பர பொருள்கள் மற்றும் கார்களை இறக்குமதி செய்வதற்கு அரசு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவைக்கு முன்வைத்த அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு எந்த தடையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அந்நியச் செலவணியை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## புதிய தூதுவருடன் உரையாடல்

ஒரு முக்கியமான காலகட்டத்தில் புதிய இந்தியத் தூதுவர் கொழும்பில் பதவியேற்றிருக்கின்றார்.

இலங்கையின் சரித்திரத்தில் தூதுவர் ஒருவர் தனது நியமனப் பத்திரத்தை நாட்டின் தலைவரிடம் கையளித்துப் பதவியேற்கும் நிகழ்வு, அதற்கு மாறாக இலத்திரனியல் முறையில், காணொலிக் காட்சி வாயிலாக அரங்கேறியிருக்கின்றது.

கொரோனாத் தொற்றுள்ள நாட்டில் இருந்து வரும் ஒருவர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர்தான் – அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் – உள்நாட்டு மக்களுடன் ஊடாடப்பட முடியும் என்பது தற்போதைய பொதுவிதி.

இந்தியாவிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் சர்வதேச விமான நிலையம் ஊடாக வந்திருக்கும் இந்தியத் தூதுவரும் இதன் காரணமாக தமது இல்லத்திலும், தூதரகத்திலும் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

தனிமைப்படுத்தல் காலம் முடிய முன்னர் அவர் இலங்கையின் ஜனாதிபதியைச் சந்தித்து தமது நியமனப் பத்திரங்களைக் கையளித்துப் பதவியை ஏற்க முடியாது.

இந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகக் காணொலி மூலம் பதவி ஏற்கும் இலத்திரனியல் முறையை இலங்கை ஜனாதிபதி வகுத்தார் எனக் கூறப்படுகின்றது.

நேற்று இதேபோன்று இலங்கைக்கான ஈரான் மற்றும் பிரேசில் நாட்டுத் தூதவர்களும் காணொலி மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தங்கள் நியமனப்பத்திரங்களைத் தெரியப்படுத்திப் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

புதிய இந்தியத் தூதுவர் நேற்றுத் தமது பதவியேற்பை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் காணொலி மூலம் உரையாடினார். அடுத்து நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர் தொடர்பு கொண்டு பேசினார் எனக் கூறப்பட்டது. அதையடுத்து மூன்றாவதாக அவர் நாட்டின் மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுடன் பேசினார் என்று கூறப்படுகின்றது.

இது, இலங்கை விவகாரத்தில் தமிழர் தரப்புக் குறித்து இந்தியா எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதற்கு நல்லதொரு சான்று.

புதிய இந்தியத்தூதுவர் இதுவரை பிரதமர் மோடியின் அலுவலகத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றியவர். அங்கிருந்து இலங்கைக்கான தூதுவராகப் பதவியேற்றிருக்கின்றார். பிரதமர் மோடி தமது அலுவலகத்தின் இணைச் செயலாளர்களுள் ஒருவரை இங்கு தூதுவராக நியமித்திருக்கின்றமை கவனிக்கத்தக்க ஒரு விடயம்.

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளராகவும், பாகிஸ்தானில் இந்தியாவின் பிரதித் தூதராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்ட தூதுவர் கோபால் பாக்லே, இந்திய வெளிவிவகார அமைச்சில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் விவகாரங்களையும் கையாண்ட அனுபவம் கொண்டவர்.

அவர் பதவியேற்ற உடனேயே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தொலைபேசியில் உரையாடியிருக்கின்றார்.

இப்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையில் நேரடிச் சந்திப்புகள் அசாத்தியமானவை மட்டுமல்லாமல் அநாவசியமானவையும் கூட.

புதிய இந்தியத் தூதுவர் – சம்பந்தன் தொலைபேசி உரையாடல் பற்றிய விவரங்கள் வெளிவரவில்லை. ஆனால் தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தனின் கருத்துக்களைக் கேட்டறிந்த அவர் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடுகளை சம்பந்தனுக்கு விளக்கினார் என்றும் கூறப்பட்டது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றத் தாம் தயார் என்று கூறிய கோபால் பாக்லே விரைவில் கூட்டமைப்பினரைச் சந்திப்பார் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இத்தகைய விவகாரங்களில் தொலைபேசிப் பேச்சுக்கள் – அதுவும் நேரடிச் சந்திப்புகளுக்கு முன்னரான தொலைபேசி உரையாடல்கள் – பரஸ்பர புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் நெருக்கத்தையும் கட்டியெழுப்பப் போதுமானவையல்ல.

ஆனாலும் கூட, தாம் பதவியேற்றவுடன் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை அடுத்துத் தமிழர் தரப்பின் தலைவரோடு பேச வேண்டும் என்ற முக்கியத்துவத்தை வழங்கியிருக்கும் புதிய இந்தியத் தூதுவரின் பண்பியல்பை – அணுகுமுறையை – தமிழர் தரப்பு சரியான முறையிலும் அதீத நட்புறவுடனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜே.என்.டிக்ஸிற் போன்ற – இலங்கைத் தமிழர்களுக்கு விரோதப் போக்குடைய – பல இந்தியத் தூதுவர்களை ஈழத் தமிழினம் நெருக்கடியான சமயங்களில் கண்டிருகின்றது.

அவர்களில் இருந்து வித்தியாசமானவராக – இலங்கைத் தீவில் பெரும்பான்மையினரின் பேரினவாத மேலாதிக்கத்தினால் பேரவலங்களைச் சந்தித்து நிற்கும் சிறுபான்மை இனமான தமிழர்கள் மீது பற்றும் பாசமும் அபிமானமும் கொண்டவராக – புதியதூதுவர் விளங்குவார் என நம்புவோமாக!

## மாலைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யு.எல். 102 விசேட விமானம், இவர்களை ஏற்றிக் கொண்டு, நேற்று நண்பகல் 12.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த விமானத்தில் 288 இலங்கையர்களுடன், ஜப்பானிய பிரஜைகள் 16 பேரும் ஏற்றி வரப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று பகல் சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்றின் மூலம் ரோக்கியோவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

## சிகிச்சை பெற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும். அத்துடன் இரண்டு கிழமையின் பின்னர் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என நோய் தொற்று தடுப்பு நிபுணர்கள் அறிய தந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

இன்று (நேற்று) 27 பேருக்கான பரிசோதனைகள் யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனைக்குட்பட்டவர்களின் விவரங்கள்:

– போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் – 4 பேர்

– போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்டவர்கள் – 2 பேர் (ஒருவருக்கு மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டும்)

–பொது வைத்தியசாலை வவுனியா – ஒருவர்

– சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு வவுனியா – ஒருவர்

– சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சண்டிலிப்பாய் – ஒருவர் (மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டும்)

– யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு – 6 பேர். இவர்கள் அனைவரும் அரியாலைப் பகுதியை சேர்ந்தவர்கள். கடந்த மாதம் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று இரண்டு கிழமைக்கு முன்னர் வீடு திரும்பியவர்கள். இன்றைய(நேற்று) பரிசோதனையில் இவர்களில் ஐவருக்கு வைரஸ் தொற்றின் தாக்கம் இன்னமும் சிறிதளவில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவர்கள் ஐவரும் தொடர்ந்தும் இரண்டு கிழமை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தலிலில் இருக்கவேண்டும். அத்துடன் இரண்டு கிழமையின் பின்னர் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என நோய் தொற்று தடுப்பு நிபுணர்கள் அறிய தந்துள்ளனர். ஒருவருக்கு மீள பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

– சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சண்டிலிப்பாய் – ஒருவர் (மீள பரிசோதனை செய்யப்பட வேண்டும்)

– பம்பைமடு தனிமைப்படுத்தல் மையம் – 11 பேர்.

## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சத்துர சேனாரத்ன சூளுரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டுபட்டுவிட்டது, சஜித் அணியும், ரணில் தரப்பும் பிரிந்துவிட்டது என்று சந்தோசமடைந்த ராஜபக்ஷ தரப்புக்கு, தற்போது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து குரல் கொடுத்து வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுவை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்தவர் கூட ராஜிதவுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னிலையாகியுள்ளார். எனவே, ராஜிதவை வைத்து முன்னெடுக்கவிருந்த அரசியல் ஆட்டத்தில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தோல்வி கண்டுள்ளது.

ராஜித சிறை வைக்கப்பட்டாலும், பிரிந்த ஜனநாயக அணிகள் நீதிக்காக ஒன்றிணைந்துள்ளன. சந்திரிகா, மஹிந்த ஆகியோரும் ராஜிதவைச் சிறையில் அடைப்பதற்கு முயற்சித்தனர். அது கைகூடவில்லை. சந்திரிகா, மஹிந்தவால் ஒன்றும் செய்யமுடியாமல் போனதை கோட்டாவுக்குச் செய்வதற்கு இடமளிக்கமாட்டோம்.

ஜனநாயகத்துக்கான எமது போராட்டம் தொடரும். அதற்கான அடித்தளம் ராஜிதவின் கைதுக்கு எதிரான நடவடிக்கையில் இருந்து ஆரம்பமாகிவிட்டது. இந்த ஆட்சியை தோற்கடிக்கும் வரை அது தொடரும். எம்மைக் கொலை செய்யலாம். ஆனால், தோற்கடிக்க முடியாது. எந்தவொரு சவாலையும் ஏற்போம் – என்றார்.

## யாழ்.பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 7 மணியளவில் இடம்பெற்றது.

அதனை அறிந்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெனாண்டோ, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.வீரசிங்க ஆகியோர் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் சம்பவ இடத்துக்கு சென்றனர்.

அங்கு தீபங்கள் ஏற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விவரங்களைச் சேகரித்த பொலிஸார், நினைவேந்தலை நடத்தியோரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

தமிழினப் படுகொலையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இந்த நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்கமைப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகப் பண்பாட்டு வாயிலில் நேற்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்த ஏற்பாடு செயப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாலை 6 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உட்செல்லும் வாயில் முன்பாக கோப்பாய் மற்றும் யாழ். பொலிஸார் காத்திருந்தனர்.

பொலிஸார் அங்கு காத்திருக்க மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் திட்டமிட்டபடி இரவு 7 மணிக்கு பண்பாட்டு வாயில் முன்பாகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மாணவர்கள் அஞ்சலி செலுத்தி முடியும் தறுவாயில், பிரதான வாயிலில் நிகழ்வுகள் நடைபெறுவதை அறிந்து கொண்ட பொலிஸார் அவ் விடத்துக்கு விரைந்து நிகழ்வைத் தடுக்க முயன்றனர்.

அப்போது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் மூவர் தாம் நிகழ்வு முடிந்து திரும்புகிறோம் எனக் கூறிச் செல்ல முற்பட்டவேளை அவர்களைப் புகைப்படம் எடுத்த பொலிஸார் அவர்களின் அடையாள அட்டைகளை வாங்கி விவரங்களைக் குறிப்பெடுத்து கொண்டனர்.

அத்துடன் இவ்வாறான நினைவஞ்சலி நிகழ்வுகளை நடத்துவது சட்டவிரோதமானது, மாணவர்களாக இருப்பதனால் உங்களைக் கைது செய்யவில்லை. இல்லை எனில் உங்களைக் கைது செய்து மூன்று மாத காலம் வரை தடுத்து வைக்க கூடிய அதிகாரம் எமக்குண்டு என கடுமையாக பொலிஸார் மாணவர்களை மிரட்டி அனுப்பினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் இடங்களுக்குச் செல்லும் பொலிஸார் சுகாதார அறிவுறுத்தல்கள் காரணம் காட்டி நிகழ்வுகளை குழப்பவுதற்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். நேற்று முன் தினம் செம்மணியில் நடைபெற்ற நிகழ்வு மற்றும் நேற்று நவாலி சென்.பீற்றர் ஆலயம், பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை பொலிஸார் குழப்ப முற்பட்டபோதிலும், நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தாம் சுகாதார அறிவுறுத்தல்களின் அடிப்படையிலையே நிகழ்வுகளை முன்னெடுக்கிறோம் என நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மங்கள சமரவீர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியல் விசாரணைப் பிரிவினால் அழைக்கப்பட்ட நிலையில், மங்கள சமரவீர நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் அங்கு சென்றிருந்தார்.

அவரிடம், குற்றவியல் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் சுமார் 5 மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது, இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் வாக்காளர்களை மன்னாருக்கு அழைத்துச் செல்வதற்காக நிதி வசதிகளை ஏற்படுத்தியமை தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கே மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

## தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகியோர் குழாமின் ஏனைய உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மனுக்கள் இந்த மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்.

## 498 கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

இதையடுத்து, இலங்கையில் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை, 925 ஆக அதிகரித்திருக்கிறது. இந்தநிலையில், நேற்று முன் தினம் தொற்று உறுதி செய்யப்பட்ட 26 பேரும், வெலிசறைக் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்ட 925 பேரில் 498 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

# ஆஸியில் வாகன நிறுத்தும் இடத்தில் 50க்கும் அதிக கார்கள் தீயில் நாசம்!

ஆஸ்திரேலியாவில் வாகன நிறுத்துமிடம் ஒன்றில் 50க்கும் மேற்பட்ட கார்கள் தீப்பற்றி எரிந்து நாசமானமை குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிட்னிக்கு அருகே ஸ்மீட்டன் கிரேன்ஜில் (றீதுளழிமிலிஜ றூஷழிஜஆள) என்ற இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் நள்ளிரவில் திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கின. இதுகுறித்து தகவலறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் 2 மணி நேரம் போராடி, தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவ இடத்தில் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும்மெக்னீசியம்கண்டறியப்பட்டுள்ளதாகவும், தீ எப்படி பரவியது என்பது குறித்து விசாரணை நடத்திவருவதாகபொலிஸார்தெரிவித்துள்ளனர்.



# இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்ட பாலஸ்தீனிய சிறுவனின் இறுதி ஊர்வலம்



இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்ட பாலஸ்தீனிய சிறுவனின் இறுதி ஊர்வலத்தில், ஆயிரக்கணக்கோர் கலந்து கொண்டு, இஸ்ரேல் அரசுக்கு எதிராக கோங்களை எழுப்பினர்.

முன்னதாக, இருநாட்டு எல்லையில், சோதனையில் ஈடுபட்டிருந்த இஸ்ரேல் இராணுவத்தினர் மீது, பாலஸ்தீனிய இளைஞர்கள், கற்கள் மற்றும் கையெறி குண்டுகளால் தாக்கியமையைத் தொடர்ந்து, இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில், ஒரு பாலஸ்தீனிய சிறுவன் உயிரிழந்தான். அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ, இஸ்ரேல் வருவதற்கு ஒரு சில மணிநேரங்கள் முன் இந்த சம்பவம் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் அடுத்த 6 மாதங்களில் மேலும் 12 லட்சம் குழந்தைகள் சாகும்!

## யுனிசெவ் அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்

நியூயார்க்,மே 15

கொரோனாவின் தாக்கம் காரணமாக உலகம் முழுவதும் 12 லட்சம் குழந்தைகள் அடுத்த 6 மாதங்களில் உயிரிழக்கக் கூடும் என்று ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் Johns Hopkins Bloomberg School of Public Health நிறுவனத்தின் ஆய்வாளர்கள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். அந்த ஆய்வில், கொரோனா தடுப்பு நடவடிக்கையாக தெற்காசியாவில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால், குழந்தை பிறப்பு, சிசு பாதுகாப்பு, நோய்த் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

பல நாடுகளில் பள்ளிகள் மூலமாகத்தான் குழந்தைகளுக்கு உணவு கிடைப்பதாகவும், தற்போது அவை மூடப்பட்டுள்ளதால் முறையாக உணவின்றி குழந்தைகள் தவிக்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து கிடைக்காமல் குழந்தைகள் பெரும் அபாயத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த 6 மாதங்களில், 5 வயதிற்குட்பட்ட12 லட்சம் குழந்தைகள் வழக்கத்தை விட கூடுதலாக உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டும் 3 லட்சம் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், பிரேசில்,பாகிஸ்தான், நைஜீரியா, மாலி மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் உயிரிழப்பு அதிகளவில் இருக்கும் எனவும் ஆய்வில் கூறப்பட்டுள்ளதாக யுனிசெப் சுட்டிக் காட்டியுள்ளது.

# கொரோனா உயிரிழப்புகள் 3 லட்சத்தைத் தாண்டியது

ஜெனீவா, மே15

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்றிரவு 3 லட்சத்தை தாண்டியது

சீனாவின் உகான் நகரில் முதன் முதலில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ், உலகம் முழுவதிலும் கோர தாண்டவம் ஆடி வருகிறது. உலகம் முழுவதும் சுமார் 180 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் கடும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. சீனா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கொரோனாவை கட்டுப்படுத்திய போதிலும், மீண்டும் 2ஆவது அலையாக அந்நாட்டில் கொரோனா பரவுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

கடந்த டிசம்பர் மாத இறுதியில், உயிர்ப்பலியை வாங்கத்தொடங்கிய கொரோனா, சுமார் 5 மாதங்களில் உலகம் முழுவதிலும் 3 லட்சம் உயிர்களை காவு வாங்கியுள்ளது. தற்போதைய நிலவரப்படி உலகம் முழுவதிலும் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300,220 ஆக உள்ளது.

அதிகபட்சமாக அமெரிக்காவில் 85,463 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். அடுத்தபடியாக இங்கிலாந்தில் 33,614 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர். இத்தாலி (31,368), ஸ்பெயின் (27,321), பிரான்ஸ்(27,074) ஆகியன கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலும் கொரோனா பாதிப்பில் இருந்து 16 லட்சத்து 82 ஆயிரத்து 872 பேர் மீண்டுள்ளனர்.



# கொரோனா வைரஸ் தடுப்பூசி உலக மக்களை சென்றடைய இரண்டரை வருடங்களாகுமாம்

லண்டன்,மே 15

கொரோனா வைரஸ் தடுப்பூசி உலக மக்களை சென்றடைய இரண்டரை வருடங்கள் ஆகும் என உலக சுகாதார அமைப்பின் சிறப்பு பிரதிநிதி டேவிட் நபரோ தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியில், உலக சுகாதார பேராசிரியராகவும் பணியாற்றி வரும் டேவிட் நபரோ கூறியவை வருமாறு:-

பாதுகாப்பான மற்றும் நன்கு பலன் தரக்கூடிய தடுப்பூசியை உருவாக்கக் குறைந்தது 18 மாதங்கள் ஆகும் என கணிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அதை அதிகளவில் உற்பத்தி செய்து, 780 கோடி உலக மக்களுக்கு கொண்டு செல்ல மேலும் ஒரு வருடம் ஆகும்.

சில கிருமிகளுக்கான பாதுகாப்பான தடுப்பூசி பல வருடங்களாகியும் உருவாக்க முடியவில்லை என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

கொரோனா குறித்த எச்சரிக்கையை முன்பே ஏன் தெரிவிக்கவில்லை என உலக மக்கள் தங்கள் நாட்டு அரசையும், உலக சுகாதார நிறுவனத்தையும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க மக்கள் நாம் இன்னும் விரைவாக செயல்பட்டிருக்க முடியாதா எனக் கேட்கின்றனர்.

முன்பே முடிவுகளை எடுத்திருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்கும் என இப்போது நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

இந்தியாவில் முதல் தொற்று கண்டறியப்பட்டபோதே, ஊரடங்கை அறிவித்திருந்தால், லட்சக்கணக்கான மக்கள் உடனடியாக பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் உயர்ந்து வரும் நிலையில், அதில் 50 முதல் 70 சதவீதம் பேருக்கு கொரோனா அறிகுறியே இல்லை என அரசு தரவுகள் கூறுகின்றன.


வலுவான நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கும் நபருக்கு,




கொரோனா அறிகுறியே தெரியாது. ஆனால், அவரால் மற்றவர்களுக்கு நோய் பரவும் என நிபுணர்கள் நம்புகின்றனர் என தெரிவித்துள்ளார்



# மது வரியை உயர்த்தியது கேரள மாநிலம்



கேரள மாநிலத்தில் மது பானங்களுக்கு 10 முதல் 35 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்படஉள்ளதாக மாநில நிதி அமைச்சர் தாமஸ்ஐசக்கூறினார்.

கேரளாவில் ஊர டங்குநடைமுறையில் இருப்பதால் எதிர்வ ரும் 17ஆம் திகதி வரை மது கடைகள் எதுவும் திறக்கப்படாது என்று முதல் மந்திரி பினராயி விஜயன் தெரிவித்தார்.

மத்திய அரசு அறிவித்த ஊரடங்கு 17ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. எனவே அதற்குப் பிறகு கேரளாவில் மதுக் கடைகள் திறக்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கலால் துறை அதிகாரிகள் மேற்கொண்டு உள்ளனர். மது கடைகள் திறக்கப்பட்டால் கடைகளுக்கு ஒரே நேரத்தில் ஏராளமானோர் வருவதை கட்டுப்படுத்த ஆன்லைன் டோக்கன் சிஸ்டத்தை அறிமுகம் செய்யவும் அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டு உள்ளனர்.

இதற்கிடையே மது வகைகளுக்கு கூடுதல் வரி விதிக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

# வீதியோர வியாபாரிகளை மீட்டெடுக்க புதிய திட்டம்

## 12.5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இந்தியாவில் அறிவிப்பு

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட வீதியோர வியாபாரிகள் பயன்பெறும் கடனுதவித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 12.5 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, பொருளாதாரத்தை மீட்



டெடுக்கும் வகையில் 20 லட்சம் கோடிரூபாய் மதிப்பிலானதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தார்.

அதன்படி மத்திய நிதியமைச்சர் நிர்மலாசீதாராமன்புதன்கிழமையில் இருந்து ஒவ்வொரு துறைக்கான அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். நேற்று புலம்பெயர் தொழிலாளர்கள், சாலையோர வியாபாரிகள், சிறு வணிகர்கள், சிறு விவசாயிகள்உள்பட 9 அறிவிப்புகளைவெளியிட்டார்.


"கொரோனா வைரஸ் தாக்கம் வீதியோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பெருமளவு பாதித்துள்ளது. அவர்கள் கடனுதவி பெற ஏதுவாக மத்திய அரசு சிறப்புக் கடன் திட்டம் ஒன்றை ஒரு மாத காலத்துக்குள்செயல்படுத்தும். முதலில் இயக்க முதலீடாக 23 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மின்னணு முறையில் பணம் செலுத்துவதன் மூலம் வெகுமதிகள் வழங்கி ஊக்கப்படுத்தப்படும். உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு மூலதனக் கடன் கிடைக்க வழிவகை செய்யப்படும். 50 லட்சம் வீதியோர வியாபாரிகளுக்கு உதவி செய்யப்படும். இதற்காக 12.5 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும்."

இவ்வா நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

# மனிதனால் ஆய்வகத்தில் உருவானதே கொரோனா

## இந்திய மத்திய அமைச்சர் திட்டவட்டம்



கொரோனா வைரஸ் மனிதனால் ஆய்வு கூடத்தில் உருவாக்கப்பட்டது என இந்திய மத்திய மந்திரி நிதின்கட்காரி தெரிவித்துள்ளார்.

சீனாவில் வுஹான் நகரில் உள்ள உயிர்ச் சந்தை (வெட் மார்க்கெட்) விற்கப்பட்ட வௌவால்களில் இருந்து இது பரவியதாக பரவலாக நம்பப்படும் நிலையில், அதே நகரில் உள்ள வைரஸ் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்தே கொரோனா வைரஸ் பரவியது என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றது.

இந்த வகையில் தான் கொரோனா ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டது என்று இந்திய மத்திய அமைச்சர் கூறியிருக்கிறார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்த தகவலை அவர் கூறி இருக்கிறார். அவர் கூறியதாவது:-

கொரோனா வைரசோடு நாம் வாழ வேண்டிய கட்டாயத்துக்கு இப்போது தள்ளப்பட்டு இருக்கிறோம்.

இது, இயற்கையாக உருவான வைரஸ் அல்ல. மனிதனால் ஆய்வு கூடத்தில் உருவாக்கப்பட்ட வைரஸ். இதற்கான தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதற்கு உலகம் முழுவதும் பல நாடுகள் போராடிக் கொண்டு இருக்கின்றன.

இந்த நோயை கண்டுபிடிப்பது சவாலாக இருக்கிறது. இதற்கு இன்னும் சிறந்த முறை தேவைப்படுகிறது. இப்படி ஒரு வைரஸ் ஆய்வு கூடத்தில் இருந்து வரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

கொரோனாவை எதிர்கொள்ள உலகம் தயாராகி வருகிறது. இந்தியாவும் தயாராகிறது. இதற்கு விஞ்ஞானிகள் நல்ல தீர்வு காண்பார்கள். நம்பிக்கையோடு இருப்போம். தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டால் பிரச்சினை ஏதும் இருக்காது. இது விரைவிலேயே நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

அது மட்டுமல்லாமல் மாற்றுதீர்வுமூலமும் இந்த பிரச்சினையை நாம் எதிர் கொள்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

# 3 ஆண்டு குறுங்கால இராணுவ சேவையை அறிமுகப்படுத்த இந்திய அரசு ஆலோசனை

இந்திய இராணுவத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தில் இளைஞர்கள் 3 ஆண்டுகள் மட்டும் பணிபுரிய அனுமதிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய இராணுவத்தில் சுமார் 13 லட்சம் வீரர்கள் உள்ளனர். உலகில் வலுவான ராணுவங்களில் ஒன்றாக இந்திய ராணுவம் திகழ்கிறது.

இருப்பினும் இந்திய இராணுவத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இராணுவத்தில் இளைஞர்கள் 3 ஆண்டுகள் பணிபுரிய அனுமதிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இதுதொடர்பாக இராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறும்போது, இராணுவத்தில் திறமையான இளைஞர்களை இணைய செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 10 ஆண்டு குறுகிய கால சேவையின் கீழ் இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களின்படி 3 ஆண்டுகள் இளைஞர்கள் பணி செய்ய அனுமதிப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

எனினும் இந்தத் திட்டத்திற்கான வரையறைகள் இன்னும் இறுதிசெய்யப்படவில்லை என்றார்

# மொத்தக் கடனையும் திருப்பித்தர விஜய் மல்லையா இப்போ தயார்

## வழக்குகளை இந்தியா வாபஸ் பெறக் கோரிக்கை



இந்திய வங்கிகளிடம் பெற்ற கடன்கள் அனைத்தையும் 100 சதவீதம் திருப்பிச் செலுத்திவிடுகின்றேன் எனக்கெதிரான வழக்குகள் அனைத்தையும் கைவிடுங்கள் என்று இந்திய மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார் பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா.

தொழில் அதிபரான விஜய் மல்லையா. மதுபான ஆலை, விமான நிறுவனம் எனப் பல்வேறு தொழில்களை நடத்தி வரும் அவர், பல்வேறு பொதுத் துறை வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்றிருந்தார். அவரது கிங்பிசர் விமான நிறுவனம் பெரும் நட்டமடைந்தது. இதைத் தொடர்ந்து பெற்ற கடனைத் திருப்பி செலுத்தாமல், லண்டனுக்கு தப்பி ஓடினார்.

அவரை நாட்டுக்கு திரும்ப அழைத்துவர இந்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. விஜய் மல்லையாவை நாடு கடத்த அங்குள்ள நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து, அவர் லண்டன் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இதனால் இன்னும் 28 நாள்களுக்குள் விஜய் மல்லையா இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. .

இந்த நிலையில் 100 சதவீத கடன்களையும் திருப்பி செலுத்தி விடுகிறேன். எனக்கு எதிரான அனைத்து வழக்குகளை முடித்து விடுங்கள் என்று மத்திய அரசிடம் விஜய் மல்லையா தனது டுவிட்டர் பக்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இந்திய அரசு அவர்களின் தேவைக் கேற்றார் போல் ரூபாய் நோட்டுக்களை அச்சிடலாம். ஆனால் என்னை போன்ற சிறு பங்களிப்பாளர் 100 சதவீத கடனை வங்கிகளிடம் திருப்பி செலுத்துகிறேன் என பலமுறை கோரிக்கை விடுத்தும், தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

# சிறுநீரைப் பருக வற்புறுத்தியதால் 20 வயது இளைஞர் அவசர முடிவு

## மத்தியப் பிரதேசத்தில் சோகம்

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் 20 வயது இளைஞர் ஒருவர் அவசர முடிவெடுத்துத் தற்கொலை செய்து கொண்டதற்கு இரு பெண்கள் உட்பட மூன்று பேர் காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர்.

தெருவோரக் குழாயில் குடிதண்ணீர் பிடிக்கும் போது ஏற்பட்ட தகராறில் இளைஞரை சந்தேகநபர்கள் மூவரும் சேர்ந்து சிறுநீரைக் குடிக்க வற்புறுத்தினர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

உயிரிழந்த இளைஞரான விகாஸ் சர்மா தனது தற்கொலைக்கு இவர்கள் மூவருமே காரணம் என்று எழுதிவைத்த கடிதத்தின் அடிப்படையில் மூவரையும் தாம் கைது செய்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய பிரதேசம் மாநிலம் ஷிவ்புரி மாவட்டத்தில் உள்ள சஜோர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் விகாஸ் சர்மா. இந்த வாலிபர் கோயிலுக்கு தண்ணீர் பிடிப்பதற்காகத் தெருவோரம் இருந்த கிணற்றுக்குச் சென்றுள்ளார்.

குடத்தில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும்போது, அருகில் உள்ள குடத்தில் தண்ணீர் பட்டதாகக் கூறி மனோஜ் கோலி என்றநபர் தனது சகோதரிகளான தரவாதி கோலி, பிரியங்கா கோலி ஆகியோருடன் சேர்ந்து தன்னைத் தாக்கினர் என்று விகாஸ் சர்மா தனது மரண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

அதோடு மட்டுமல்லாமல் தான் வைத்திருந்த குடத்தில் சிறுநீர் கழித்து, அதைக் குடிக்க மூன்று பேரும் சேர்ந்து வற்புறுத்தினர் என்றும் இதனால் மனமுடைந்தே தான் தற்கொலை செய்து கொள்கிறார் என்றும் மரண வாக்கு மூலமாகத் தான் எழுதி வைத்த கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சந்தேகநபர்கள் மூன்று பேரின் மீதும் தாமாக முன்வந்து காயத்தை ஏற்படுத்துதல், தற்கொலைக்கு உடந்தை ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

இன்று சர்வதேச குடும்ப தினம்



# நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்

ஆக்கம்: ம.பிரான்சிஸ்க், M.A
ஆசிரியர் - தொடர்பாடல் - ஊடகவியற்கறகை,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

சர்வதேச குடும்பதினம் (International Day of Family) இன்று. குடும்ப ஒற்றுமையை முக்கியத்துவப் படுத்தி அதனை எல்லாரும் உணர வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை(ஐ.நா) 1992ஆம் ஆண்டு இத்தினத்தை பிரகடனப்படுத்தியது. அன்றிலிருந்து ஆண்டு தோறும் வைகாசி 15ஆம் நாள் இத்தினம் கடைபிடிக் கப்பட்டு வருகிறது.

எவ்வகையான சூழ்நிலையிலும் எந்த வயதினிலும்,எவரும்குடும்பத்தைகைவிடாமல்ஆதரவளிக்க வேண்டும் என்பதைச் சர்வதேச குடும்பதினம் எமக்கு வலியுறுத்துகின்றது. குடும்பங்களுக்கிடையே, சமத் துவத்தை வளர்ப்பதுவும், வீட்டுப் பொறுப்புக்கள், தொழில் வாய்ப்புக்கள் பற்றி குடும்பங்களின் பங்கினை உணர்த்துவதும் இத்தினத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

சமுதாயத்தின் முதல் நிறுவனமான குடும்பம் இன்று சீரழிக்கப்படுவது ஒட்டு மொத்த சமுதாயத்தின், அத்திவாரத்தையே அசைக்க செய்கிறது. இன்றைக்கு பல குடும்பங்களில் குழந்தைகளோடு பேசி மகிழ்வதற்கு பெற்றோர்களுக்கு நேரமில்லை. வேலைப்பளுவும்,தொலைக்காட்சியும்,செல்போனும், இணையமும் பொன்னான நேரங்களை பொசுக்கி விடுகின்றன. அதேபோல்,பிள்ளைகள் தங்களுக்கு நேரமில்லை, கஷ்டம் என்ற போர்வையில் தங்களது பெற்றோர்களை யும் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடும்அவலமும்அரங்கேறுகிறது.நாம்பலநேரங்களில் பொருளாதாரத்தை மட்டுமே இன்று இலக்காக வைத்து குடும்ப செயற்பாடு களை சீர்குலைத்து விடுகின்றோம்.

இங்கு பைபிளில் சீராக் புத்தகத்தில் 3ஆம் அதிகா ரத்தில் கூறப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடுவது சாலச் சிறந்து: "சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு ஆண்டவரின் ஆசி கிடைக்கும். தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும்; தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த் தெறிந்து விடும்."

### வேடம் ஏற்கும் வாழ்க்கை

ஒவ்வெரு நாளும் ஒவ்வொரு மனிதரும் இன்று குடும்பத்தில், வேலையிடத்தில், சமூகத்தில் என்ற மூன்று வேடங்களை ஏற்க நேரிடுகிறது. வேலையிடத்தில், சமூகத்தில் என்ற இரண்டும் எப்போது வேண்டுமானாலும் ஒருவருக்கு மாற்றத்திற்குள்ளாகலாம்.



ஆனால், இன்பத்திலும் துக்கத்திலும், சோதனையிலும் வேத னையிலும் என்றும் மாறாதது குடும்பம்தான் என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது. எம் ஒவ் வொருவர் வாழ்விலும் இன்று வேலையிடம், சமூகம் ஆகிய இரண்டும் அதிக இடத்தைப் பிடித்து குடும்ப உறவுகளுக்கான நேரத்தை எடுத்துக் கொள்கின்றன. இதை தவிர்க்க நாம் குடும்ப உறவுகளில் அதிக கவனம் செலுத்துவதோடு, அவர்களுக்குரிய நேரத்தையும் சரியாக ஒதுக்க வேண்டும். முக்கியமாக உறவுகளை பலப்படுத்துவதற்குரிய பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். கூடிக் குலாவி ஒற்றுமையாக வாழ்வதற்கு, வேற்றுமைகளை புறந்தள்ளுவோம்.

### அற்புத அமைப்பு குடும்பம்

குடும்ப ஒற்றுமையை உலகிற்கு முதலில் சொன்னது தமிழர்கள்தான். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பது தமிழ் பழமொழி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிறது புறநானூறு. ஒரு கூட்டு கிளியாக ஒரு தோப்பு குயிலாக நமக்குள் சந்தோஷங்கள், சிறு சிறு சண்டைகள், சமாதானங்கள் என அனைத்தும் நிறைந்த அற்புத அமைப்பு குடும்பம். அது அனைத்து உறவுகளும் சங்கமித்திருக்கும் மாபெரும் சமுத்திரம் எனலாம். ஆனால் சமூக வலைத்தளங்களில் இன்று குழுக்கள் உருவாக்கி, குடும்ப உறவுகள்கூட்டாகவாழ்கின்ற நிலையையே மேலோங்கியிருப்பது வேதனைக்குரியது.



பாட்டிகள், பார்க்குகள், பீச்சுகள், சினிமா கொட்டகைகள் என இவைகளை தாண்டி ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி உண்டென்றால் அது குடும்பத்தில் மட்டுமே என்று ஆணித்தரமாக கூறலாம். நாம் இழந்துவரும் பண்பாடுகளில் தற்போது மிக முக்கியமானது குடும்பமும் ஒற்றுமையும்தான். குடும்பங்களுக்குள் ஒற்றுமை இருக்கும் வரை, மனிதனுக்கு வாழ்க்கையில் கவலை இருப்பதில்லை என்று உறுதிபடக் கூறலாம்.

### முதியவர்களும் அடைக்கலாம் குருவியும்

இன்று தனி மனிதனின் சுதந்திரம் என்று பலர் குடும்பத்தை தவிர்த்து தனியாக வாழ முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனால் பல குடும்பங்கள் சிதைந்துபோகும் நிலை உருவாகின்றது. இதனால் நாம் தனிக்குடும்ப வாழ்வில் மட்டும் விலகி நிற்கவில்லை. அன்பு, பாசம், நேசம் போன்றவற்றிலிருந்து சிறிது சிறிதாக விலகி தூரமாக போய்விடுகிறோம். முன்பு எம்குடும்ப வாழ்வில் முதியோர் இல்லம் இருந்ததா என்று வினவினால் இல்லை என்று சட்டென பதில் தரலாம். இன்றோ காணும் இடமெங்கும் முதியோர் இல்லம் முளைத்துள்ளதை வேதனையோடு கண்நோக்கும் நிலை. முதியவர்கள் இல்லதா வீட்டில் அடைக்கலாம் குருவி தங்கியிருப்பதில்லை என்று எனது ஆச்சி அன்று கூறியது இன்று என் நினைவுக்கு வருகிறது. தாத்தா, பாட்டி, என்ற வாழ்வியல் முறை மிகவும் இன்பமானது என்பதை நாம் மறந்தே போய்விட்டோம். எனவே பொருளாதார தேடலுக்காகவும் வேறு தேவைகளின் நிமிர்த்தம் பிரிந்திருந்தாலும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் கூடி மகிழ்ந்து குடும்ப உறவுகளை போற்றுவோம் என இந்த சர்வதேச குடும்ப தினத்தில் உறுதியேற்போம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# சிவில் சேவைகளில் ராணுவ அதிகாரிகளை நியமிப்பது ஜனாதிபதியின் தனித்தீர்மானம்

சிவில் சேவைகளில் இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் தீர்மானம் ஜனாதிபதியைச் சார்ந்ததாகும். மக்கள் அவருக்கு கொடுத்துள்ள ஆணையின் பிரகாரம் அவர் தீர்மானம் எடுப்பதாக அரசு கூறுகின்றது.

ஏனைய துறைகளில் இருக்கும் அதிகாரிகளை விடவும் அதிக திறமை கொண்ட, ஒழுக்கமான அதிகாரிகள் இராணுவத்தில் உள்ளனர் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக் காட்டினார்.

இராணுவ அதிகாரிகளை அரசதுறைகளுக்கு நியமிக்கும் நடவடிக்கை குறித்து அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதே அதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணை ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இராணுவ அதிகாரிகளை முழுமையாக சிவில் சேவைகளில் இணைத்துக்கொள்ள எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

எனினும் ஏனைய துறைகளில் இருக்கும் அதிகாரிகளைவிடவும் அதிக திறமை கொண்ட, ஒழுக்கமான அதிகாரிகள் இராணுவத்தில் உள்ளனர்.

இலங்கை வரலாற்றில் யாருடைய ஆட்சி இருந்தாலும் நாட்டின் தேவை, அவசரகால நிலைகளிலும் இராணுவ அதிகாரிகளை பயன்படுத்தும் முறைமை இருந்தது. கடந்த ஆட்சியில் உயர்கல்வி அமைச்சின் சில பதவிகளுக்கும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

சுகாதார அமைச்சிற்கு இப்போது மிகக் கடுமையான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் அமைச்சர்கள், செயலாளர்கள் நியமனம் முழுமையாக ஜனாதிபதியின் அதிகாரபூர்வ பொறுப்பாகும்.

இதில் சவால் விடுக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. அவர் மக்கள் ஆணையின் பிரகாரம் செயற்பட்டு வருகின்ற காரணத்தினால் மக்களின் நன்மை கருதியே அவர் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றார். இதில் நட்பு, உறவு என எதைனையும் அவர் பார்க்கப் போவதில்லை.

அனுபவசாலிகள், கல்விமான்கள், விடயத்திற்கு பொறுப்பான அறிவு இருக்கும் இராணுவ அதிகாரிகளை நியமிப்பதில் எந்த தவறும் இல்லை. யுத்த காலத்தில் சேவை செய்தவர்கள் ஏனைய நேரங்களிலும் சேவை செய்வார்கள் ஆனால் இதில் இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் தீர்மானம் முற்று முழுதாக ஜனாதிபதி சார்ந்ததாகும் - என்றார்.








SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# அரசியல்வாதிகளின் தேவைகளுக்கே மதுபானச்சாலைகள் மீண்டும் திறப்பு

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 15

அரசியல்வாதிகளின் தேவைகளுக்காகவே மதுபானச் சாலைகள் மீள திறக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இந்த தீர்மானம் முற்றிலும் தவறானது. கொரோனா வைரஸ் பரவல் நாட்டில் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வில்லை. இவ்வாறான நிலையில் மதுபான சாலைகள் திறக்கப்பட்டுள்ளதால் கொரோனா வைரஸ் பரவல் தீவிர மடைவதற்கு அதிக சாத்தியம் காணப்படுகின்றது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டிய போதிராஜ விகாரையில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மதுபானச்சாலைகளை திறக்குமாறு பொது மக்கள் எவரும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை. அத்தியாவசிய தேவைகள் மற்றும் பாதுகாப்பான பொது போக்குவரத்து சேவை உள்ளிட்ட விடயங்களை மாத்திரமே முன்வைத்தார்கள்.

பெரும்பாலான மதுபானச்சாலைகள் அரசியல்வாதி களுக்கும் இஅவர்களது உறவினர்களுக்கும் சொந்தமா னது. இவர்களது கோரிக்கைகளுக்காகவே மதுபானச்சா லைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த ஜனாதிபதி முன்னெடுத்த நடவடிக்கைகள் பிற நாடுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக காணப்பட்டன.ஆனால் மதுபானசாலை கள் திறக்கப்பட்டமை முற்றிலும் தவறான தீர்மானமாகும்.

மதுபோதையில் உள்ளவர்கள் எவ்வாறு சுகாதார பாது காப்பு வழிமுறைகளை பின்பற்றுவார்கள். மதுபானசாலை களின் முன்னிலையில் வரிசைகரமாக இருந்தவர்கள் செயற்பட்ட விதம் வெறுக்கத்தக்கது.

ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி உலக நாடுகள் பாது காப்பான முறையில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ள நிலையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் சுற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிகவும் நெருக்கடியான நிலையில் மதுபானச்சாலைகள் திறக்கப்பட்டுள்ளமை கொரோனா வைரஸ் பரவலை தீவிரப்படுத்தும்.

ஆகவே மதுபானசாலைகளை மீள திறக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை ஜனாதிபதி மீள் பரிசீலனை செய்ய வேண்டும் – என்றார்.

# கொரோனா இங்கு இன்னும் சமூகப் பரவலாகவில்லை

கொழும்பு, மே. 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றா னது இன்னும் சமூக பரவலுக்கு உள்ளாகவில்லை என சுகாதார அதிகாரிகளும் கொரோனா தொற்று ஒழிப்புக்கான விசேட தொற்று நோயியல் பிரிவின ரும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரிவினருக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் வழங்கப்படும் ஆலோசணைகளுக்கு அமைய கொரோனாவைத் தடுக்கும் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு இந்த விடயமே சான்று எனச் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் படிப்படியாக முடக்கத்தை தளர்த் துவதன் மூலம் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்து வதற்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளை மக்கள் பின்பற்றுகிறார்களா என்பதை பிராந்திய அளவில் பொது சுகாதார ஆய்வாளர்கள் ஆராய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஆலோசனையை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸா ருக்கு அறிவுறுத்தப்படும் என்று அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கூறினார்.

இதேவேளை, மழை காலம் ஆரம்பித்துள்ள தால், டெங்கு நோய் தாக்கம் ஏற்படக்கூடும் என்ப தால் டெங்கு ஒழிப்பு திட்டங்களில் கவனம் செலுத்து மாறு தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016


பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012


# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக் குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'பனையோலை விசிறி'

**படம் 1**
லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

**படம் 2**
வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'முகக்கவசம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியா ததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

ம. யதோட்சயன் - தரம் 8
யா/ மத்திய கல்லூரி

ந. லனுஜன் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஜி. வர்சிகா - தரம் 3
வல்வை அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை

ஜி. பவித்திரன் - தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எம் ஆர் எம் ராத் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம் ஆர் எம் நஸீம் - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். ஆர். எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஐ. ரிஷிகரன் - தரம் 10
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஏ. மதுஷிகா - தரம் 7
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

இ எம் டபிள்யு டபிள்யு ஹிருஷி - தரம் 6
லக்தாஸ் தேசிய பாடசாலை, குருநாகல்

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ஆர். அஜிஷன் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

எம். ஹனுசியன் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கி. பி. கசிந்திரா - தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

மயூதரன் யதுசன் - தரம் 6
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## பனையோலை விசிறி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (15/05/2020) தலைப்பு**
**பனையோலை விசிறி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# அரச படை அட்டூழியங்களால் அகால மரணமுற்ற எம் மக்களை அஞ்சலிக்கும் நினைவு வாரம் இது!


## மரம் நடுகையை வலியுறுத்துகின்றார் விக்னேஸ்வரன்

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு வாரம் என்பது அரசாங்க படைகளின் அட்டூழியத்தால் அகால மரணமடைந்த எமது மக்களின் நினைவாக நாம் செலுத்தும் எமது அஞ்சலி நிகழ்வுகளின் வாரமாகும்.**

**இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக் னேஸ்வரன். தமது வாராந்த கேள்வி - பதில் செய்தி அறிக்கையிலேயே அவர் இது குறித்துக் குறிப்பிட்டுள் ளார். இவ்வார கேள்வி பதில் வருமாறு:-**

**கேள்வி:** உங்கள் பயன்தரு மரநடுகை செயற்றிட்டம் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:** முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு வாரமானது ஆண்டு தோறும் மே மாதம் 18 ஆம் திகதியை யொட்டிய காலமாகும். அது அரசாங்க படைகளின் அட்டூழியத்தால் அகால மரணமடைந்த எமது மக்களின் நினைவாக நாம் செலுத்தும் எமது அஞ்சலி நிகழ்வுகளின் வாரமாகும். இறந்தவர்களுக்கும் பயன்தரு மர நடுகைக்கும் என்ன தொடர்பு என்று கேட்பீர்கள். தொடர்பு இருக் கின்றது. இனப்படுகொலையின் போது எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் உடல்கள் புதைக்கப்பட்டு அவை மண்ணோடு மண்ணாகிவிட்டன. எரிக்கப்பட்டவர்களின் சாம்பல் மண்ணுக்கு உரமாகி விட்டது. மண்ணோடு மண்ணாகக் கலந்த அந்த உடல்களின் எஞ்சியவை வீணாகப் போய்விடக்கூடாது. மீண்டும் அவை உயிர்த்தெழ வேண்டும். எம் மக்களின் வைராக்கியத்தை வலுவேற்ற வேண்டும். அவர்கள் மரணம் வெறும் மரணமாக ஆகிவிடக்கூடாது. எமது வருங்காலத்தை மாற்றி அமைக்கும் வலுவான ஊட்டமாக அவர்களின் உடற் துகள்கள் மாறவேண்டும். அவர்களால் மெருகூட்டப்பட்ட உரம் எமக்கு ஊட்டமாகவும் உற்சாகம் கொடுக்கும் உணவாகவும் மாற வேண்டும். அவர்களின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டன, எரிக்கப்பட்டன என்பது முக்கியமல்ல. இந்த வட கிழக்கில் எமது தாயகத்தில் எங்கோ ஓர் இடத்தில்த்தான் நிலத்துடன் அவர்கள் கலந்துள்ளனர். இந்த நிலத்தில் விருத்தியாகப் போகும் பயன்தரு மரங்கள் எமது மரணித்த உறவுகளின் உடலின் உரத்தையும் தம் வசம் ஈர்த்தெடுக்கப் போகின்றன. ஆகவே மே பதினெட்டில் ஒவ்வொருவரும் ஒரு பயன்தரு மரம் நாட்டுங்கள். தமிழர் தாயகத்தை வளப்படுத்துங்கள். – என்று உள்ளது.



## அளவுக்கதிகமாக மதுபானம் கொண்டு சென்றவர்கள் கைது

யாழ்ப்பாணம், மே. 15

நெல்லியடி பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட வீதி சோதனை நடவடிக்கைகளின்போது அனுமதி பத்திரமின்றி பெருமளவான மதுபான போத்தல்களை கொண்டு சென்றனர் எனும் குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸார் தமது பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை வீதி சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்போது நான்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அனுமதிபத்திரமின்றி பெருமளவான மதுபானப் போத்தல்களைக் கொண்டு சென்ற நால்வரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களால் கொண்டு செல்லப்பட்ட பெருமளவு மதுபானமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் மதுபான விற்பனை நிலையங்களை திறக்க அனுமதிக்கப்பட்டதை அடுத்து பலரும் முண்டியடித்து வரிசையில் நின்று மதுபானத்தை கொள்வனவு செய்திருந்தனர். சிலர் அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது

வவுனியா, மே. 15

ஓட்டோவில் கொண்டு செல்லப்பட்ட 1330 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வன்னி பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் இந்தப் போதைப் பொருள் மீடகப்பட்டதுடன் 36 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மதுபானச்சாலைகள் திறந்தவுடன் மக்களின் செயற்பாடுகள் மோசம்

### தொடர்ந்தால் சட்ட நடவடிக்கை என்கிறது அரசு

கொழும்பு, மே. 15

கட்டம் கட்டமாக நாட்டினை விடுவிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையை மக்களே சீரழிக்கும் விதத்தில் செயற்பாடுகள் அமைந்துள்ளது. மதுபானச் சாலைகளின் முன்னாள் பொதுமக்களின் செயற்பாடுகள் மோசமாக அமைந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது அரசு.

நாட்டில் மதுபானச் சாலைகளை திறக்க அனுமதி வழங்கிய நிலையில் மக்களின் செயற்பாடுகள் மோசமாக அமைந்துள்ளது. இத்தனை நாட்கள் முன்னெடுத்து வேலைத்திட்டங்கள் அனைத்துமே இதனால் வீணாகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

எனவே இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியார் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதே இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணை ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவிக்கையில் –

கொவிட் –19 தாக்கத்தில் இருந்து நாடு இப்போது தான் படிப்படியாக விடுபட்டு வருகின்றது. கட்டம் கட்டமாக நாட்டில் வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில் அதனை சீரழிக்கும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டால் யாருக்குமே இந்த தாக்கத்தில் இருந்து விடுபட முடியாது போய் விடும்.

சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவலுக்கு மீண்டும் இடம் கொடுத்தால் இரண்டாம் சுற்று தாக்கம் ஒன்று உருவாக்கும் என்பது உலகத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெர்மன், சிங்கபூர், கொரியா போன்ற நாடுகளில் முழுமையாக வைரஸ் தாக்கத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்த பின்னர் தேர்தல் நடத்தியும் ஏனைய அனாவசிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டும் மீண்டும் இரண்டாம் சுற்றில் வைரஸ் தாக்கம் உருவாகியுள்ளது.

இலங்கையில் இப்போது கொடுக்கும் சுதந்திரத்தை அனாவசியமாக மக்கள் கையாள நினைத்தால் விரும்பியோ விரும்பாமலோ மீண்டும் கட்டுப்பாடுகளை முன்னெடுக்கவும், அதேபோல் ஊரடங்கு சட்டத்தில் கையாள வேண்டிய சட்ட நடவடிக்கைகளை பொலிஸ் மற்றும் அதிரடிப்படையை கொண்டு முன்னெடுக்க வேண்டி வரும். இதில் மதுபானசாலை கட்டுப்பாடுகளும் விதிக்கப்படும் – என்றார்.

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகிறது.



அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணம்.
தொ. பே:-021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ. பே:- 021 222 6113

# நல்லதோர் குடும்பம் ...



(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மூத்தவர்களும் கட்டுப்பாடும் அரவணைப்பும்

முன்பெல்லாம் கிராமத்திலும், நகரத்திலும்கூட குடும்ப வாழ்வில் கட்டுப்பாடான வாழ்க்கை முறை மேலோங்கியிருந்தது, பெற்றோருக்கு அடங்கிய பிள்ளைகள், ஆசிரியர்களுக்கு கீழ்ப் படிந்த வாழ்க்கை முறை என நன்றாகவே எம் குடும்ப அமைப்பு இருந்தது. ஆனால், அண்மைக்காலமாக இவை அனைத்துமே புறந்தள்ளப் பட்டு நேர்மாறாகி விட்டன என்பது வேதனை நிறைந்த உண்மை.

வீட்டில் மூத்தவர்கள் இருந்தால் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதுடன், கட்டுப்பாடும் நிறைந்திருக்கும். அரவணைப்பும், கண்டிப்பும் மிகுந்திருக்கும் அத்துடன் தாய், தந்தை கண்டிப்புடன் இருப்பதால் குழந்தைகளைச் சிறப்பாக வளர்க்க முடிகிறது. இன்று தாயே சேயைத் தந்தைக்கு தலையிலே அடிக்கும்படியும் கூறி வளர்க்கும் நிலை கண்டு நிம்மதியிழக்கின்றோம். ஒரு குடும்பத்தில் பெற்றோர் வேலைக்குச் செல்ல நேரிடும்போது குழந்தைகளைப் பொறுப்பாக யாரும் கவனிக்க முடியாத நிலை இன்று ஏற்படுகிறது. அத்துடன் அவர்கள் என்ன படிக்கிறார்கள், எங்கு செல்கிறார்கள் போன்றவற்றைக் கவனிக்கக்கூட நேரமிருப்பதில்லை. எனவே பலர் கணினி, அலைபேசி, இணையதளம், சினிமா, நண்பர் என ஆங்காங்கே திரியவும் நேரிடுகிறது.

### உறவு முறைகளைத் தெரியா குழந்தைகள்:

எம் பிள்ளைகளில் பெரும்பாலனவர்களுக்கு இன்று தங்களது பெற்றோரைத் தவிர, வேறு உறவு முறைகளைத் தெரிவதில்லை என்பதும் வேதனைகலந்த உண்மை. உறவினர்கள் வீட்டு விசேஷங்களிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வதற்கு இவர்களுக்கு நேரமோ, வாய்ப்போகிடைப்பதில் லை என்கிறார்கள் பலர். இதனால் பெரும்பாலான நேரங்களை தனிமையிலும், பொழுதுபோக்கு அம்சங்களிலுமே கழிக்க நேரிடுகிறது. இதனால் மனஅழுத்தம், வெறுப்பு, நிம்மதியின்மை போன்ற பாதிப்புகள் உண்டாகின்றன. தங்களுடைய குறைகளையோ, நிறைகளையோ மனம் விட்டு யாரிடமும் பேச முடிவதில்லை. குறைந்தபட்சம் தான் செய்வது சரியா, தவறா என்று இவர்களால் முடிவு கூட எடுக்கக்கூடத் தெரிவதில்லை. குடும்பங்களின் சுய நம்பிக்கையை வளர்த்து துன்பங்களை சகிப்புடன் எதிர் கொண்டு புத்துணர்ச் சியோடு செயற்படத் தூண்டுவதையும் இது போன்ற மக்களின் இயல்புச் சக்திகளை மேலோங்கச் செய்வதையும் இத்தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் வலியுறுத்துகின்றன. பால் இன பாகுபாடின்றி, மக்களிடையே சமத்துவத்தை பேணி வளர்ப்பதையும் பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதையும் இத்தினம் வலியுறுத்துகின்றது. குடும்பத்தை நேசிப்பவர்களால்தான் தேசத்தையும் நேசிக்க முடியும். தேசத்தை நேசிக்கும்போதுதான் நாம் மக்களுடன் மனிதநேயத்துடன் பழக முடியும் என்பதை இந்த தினம் வலியுறுத்துகிறது.

குடும்ப தினம் என்றால், கணவன், மனைவி, குழந்தை என்று சிறு குடும்பமாக வாழ்கிறவர்களுக் கான தினம் என்று பலரும் நினைக்கிறார்கள். குடும்பம் என்பது இந்த மூன்று நான்கு பேர்கள் மட்டுமல்ல. சங்கிலித்தொடர்போல பல உறவுகளை இணைத்துச் செல்வதுதான் குடும்பமாகும். தொட்டி செடி போன்றது அல்ல குடும்பம். பல விழுதுகள் விட்டு வளரும். ஆலமரம் போன்றது குடும்பம். ஒரு குடும்பம் என்பதில் மூன்று தலைமுறையினராவது கலந்திருக்க வேண்டும். அந்த காலத்தில் வீடென்றால், தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா, மாமா, அத்தை, அண்ணன்கள், அக்காக்கள், தங்கைகள், தம்பிகள் என்று ஒன்றாக இருப்பார்கள். ஆனால், இப்போது குடும்பம் என்பது குட்டிக் கூடாரங்கள் ஆகிவிட்டது.

குடும்ப உறவுகளின் அன்பே, அணையா ஒளிவீசி வாழ்வின் துணையாய் துயர வழிகளில் தூணாகும் விளக்காய் உயர வழிகாட்டும் உணர். அன்பினை பகிர்ந்திடுவோம். உறவினை போற்றிடுவோம். உணர்வினை பகிர்ந்திடுவோம். அறத்தினை வளர்த்திடுவோம். ஆதரவு தந்திடு வோம். ஆனந்தம் கண்டிடுவோம். மனம் திறந்து சிக்கலை தீர்த்திடுவோம். சிரித்தி பழகிடுவோம். சிறப்பென வாழ்ந்திடுவோம். தூய அன்போடு தொய்வின்றி தொடர்ந்திடுவோம். குழப்பத்தை தவிர்த்திடுவோம். குலத்தினை காத்து வளர்த்திடுவோம். எனவே நல்ல குடும்பத்தை உருவாக்குவதும், இருக்கின்ற குடும்பத்தை தக்க வைத்துக் கொள்வதும் எமது கடமையாகும். நமக்கு முன் வாழ்ந்துவிட்டுச் சென்ற முன்னோர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி நல்ல குடும்பங்களை அமைப்போம்.

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக ரிஷாத் தரப்பினர் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக மக்கள் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிாத் பதியுதீன் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

கொவிட் - 19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் அனைவரையும் அங்கீகரிக்கப்பட்ட சுடலை அல்லது இடத்தில் தகனம் செய்ய வேண்டுமென சுகாதார அமைச்சர் பவித்திரா தேவி வன்னி ஆராச்சியினால் வெளியிடப்பட்ட 2170/08 எனும் வர்த்தமானியை வலுவிழக்கச் செய்யக் கோரி -

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், அக்கட்சியின் தவிசாளர் அமீர் அலி, தேசிய அமைப்பாளர் அப்துல் லாஹ் மஹ்ரூப், பொருளாளர் ஹூசைன் பைலா ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி தவராசா ஊடாக இந்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னி ஆராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டே இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்களான தமது மனுவில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் நடைமுறையில் இருந்து வரும் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்புக்கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், தொற்றுநோய்களால் மரணிப்பவர்களின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடும் இருக்கத்தக்க நிலையிலேயே கொரோனா வைரஸினால் உயிரிழந்தவரின் உடல் தகனம் செய்யப்பட வேண்டுமென திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானியின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்புக்கட்டளைச் சட்டம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் திருத்தப்பட்டமையை வலுவிழக்கச் செய்து கொவிட் - 19 வைரஸினால் உயிரிழப்பவர்களை புதைக்கவோ அல்லது தகனம் செய்யவோ முடியுமென மீளத் திருத்தி வெளியிட உத்தரவிட வேண்டும். - எனமனுதாரர்கள் கோரியுள்ளனர்.

மரணித்த உடலை அடக்கம் செய்வதை விட எரித்தலானது வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்தும் என்ற விஞ்ஞான ரீதியான எந்தச் சான்றுகளும் இல்லாத நிலையில்,

உலகத்தில் மில்லியன் கணக்கானோருக்கு கொவிட் - 19 வைரஸ் பரவியிருக்கும் சூழலில் உயிரிழந்த இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோரின் உடல்கள் பல நாடுகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றமையையும் மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலக நாடுகளில் இதுவரை அடக்கம் செய்யப்பட்டவர்களில் எந்தவொரு உடலத்திலிருந்தும் நோய் பரவியதாக ஓர் அறிக்கையேனும் இல்லையெனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டிருக்கின்றமையோடு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இடைக்கால வழிகாட்டலில் இந்த இரண்டு தேர்வுகளும் உள்வாங்கப்பட்டிருக்கின்றமையையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இவற்றை வலுவான காரணங்களாக ஏற்று நீதி பெற்றுத்தருமாறு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வெலிசறை கடற்படை முகாமிற்குள் பரவிய கொரோனா அம்முகாமுக்குள்ளேயே முற்றாக முடக்கி அடக்கப்படுமாம்



வெலிசறை கடற்படை முகாமிற்குள் பரவிய கொரோனா வைரஸ் தொற்று அந்த முகாமுக்குள்ளேயே முடக்கப்படும் என ஸ்ரீலங்கா கடற்படை தெரிவித்துள்ளது.

'எக்கனமி நெக்ஸ்ட் 'என்ற இணையத் தளத்திற்கு கடற்படை பேச்சாளர் இசுருசூரிய பண்டார மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடற்படையினர் சுகாதார அதிகாரிகளின் உதவியுடன் வெலிசறை முகாமிற்குள் உள்ள கடற்படையினருக்கு பி:சி.ஆர். பரிசோனைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். இதுவரை 3000 பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளோம்.

சுகாதார தொழில்நுட்பவியலாளர்கள் மாதிரிகளை சேகரித்து அரச ஆய்வுகூடங்களுக்கு அனுப்புகின்றனர். சிலவேளைகளில்கொரோனா தொற்று இல்லை என சோதனைமுடிவுகள் வந்தாலும் நாங்கள் தொடர்ந்தும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

வெலிசறை முகாம் தனக்கான தனிமைப் படுத்தல் முகாமை கொண்டுள்ளது. அங்கு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உள்ளனர்.

தொற்றுநோய்க்குள்ளான கடற்படையினரின் குடும்பத்தவர்களும் அவர்களுடன் நெருக்கமான தொடர்பிலிருந்தவர்களும் அங்கு உள்ளனர். நாங்கள் அவர்களை சிறப் பாக கவனித்து வருகின்றோம்.

கொரோனா வைரஸ் காரணமாக கடற் படையினரின் நடவடிக்கைகள் திறன் பாதிக்கப் படவில்லை, வெலிசறை முகாமிற்குள் ளேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஐம்பதினாயிரம் கடற்படையினர் தங்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கடற்படையினர் தங்களது கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். கொரோனா நெருக்கடி காரணமாக தாங்கள் சுதந்திரமாக செயற்பட முடியும், சட்டவிரோத நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியும் என சிலர் கருதுகின்றனர். இதன் காரணமாக நாங்கள் எங்கள் கண்காணிப்பினை தீவிரப்படுத்தியுள்ளோம். - என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# லண்டனில் யாழ். தமிழர் கொரொனாவுக்குப் பலி

லண்டனில் கொரோனா தொற்றால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைச்சேர்ந்த கிருஷ்ண பிள்ளை சத்தியயோகன் (வயது 55) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு 35 நாள்களாக மருத்துவமனையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் புதன்கிழமை இவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் பெல்ஜியத்திலும் யாழ்ப்பாணம் மயிலிட்டியைச்சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொரோனாவுக்கு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2020 இல் வெளியிடப்பெற்றது.